SACRED HEART COLLEGE (AUTONOMOUS)
Tirupattur - 635 601
Tamil Nadu, India.
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 45. TML1184 - சங்க இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு

பா ரம்யா
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர் – 635 601.
(திருவள்ளுவர் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

**ஆய்வுச் சுருக்கம்**

பண்டையத் தமிழ் மக்களின் வழிபாட்டு முறையானது இயற்கையிலிருந்தே தொடங்குகிறது. முதல் வழிபாடு பெண்களிடமிருந்து தொடங்கினாலும், பெண்கள் தங்கள் மகப்பேற்றினை வைத்துத் தெய்வமாக வழிபடப்படுகிறார்கள். பண்டையத் தமிழ் இலக்கியங்களில் சங்க இலக்கியம், உள்ளிட்ட செவ்வியல் இலக்கியங்களில் தாய்த்தெய்வ வழிபாட்டிற்கு ஏராளமான சான்றுகள் தருகின்றன. தமிழ் இலக்கியங்கள் தாய் வழிபாடு குறித்த விரிவான விளக்கங்களை நமக்கு வழங்குகின்றன. இக்கட்டுரையின் நோக்கமும் பண்டைய தமிழ் இலக்கியத்தின் சான்றுகளை முன்வைத்து தாய்த்தெய்வ வழிபாட்டைக் கண்டறிவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இக்கட்டுரையில் வரலாற்று அணுகுமுறை பகுப்பாய்வு அணுகுமுறை மற்றும் கள ஆய்வு அணுகுமுறை பயன்படுத்தப்படுகின்றன.

**குறிச்சொற்கள்**

செவ்வியல் இலக்கியம், தாய்த்தெய்வ வழிபாடு, கொற்றவை

## முன்னுரை

வளமையின் குறியீடாகப் பண்டைக் காலம் தொட்டு பெண் கருதப்பட்டதால் வழிபாட்டுக்கும் வணங்குவதற்கும் உரியவளாகப் பெண்கள் போற்றப்பட்டனர். இலக்கியங்களும் பெண்களின் மகத்துவத்தைப் பல்வேறு காலக்கட்டங்களில் பதிவு செய்துள்ளன. தாய் நாடெனவும், தாய் மொழியெனவும் ,நிலம், நதி ,கடல், மலை என இயற்கையின் வெளிப்பாடுகளைப் பெண்ணின் பெயரால் பெருமைப்படுத்தபட்டன. பெண்மையின் மாபெரும் படைப்பு தாய்மை என்னும் உறவு நிலையாகும். தாய் என்பவள் தெய்வத்திற்கு இணையான நிலையில் வைக்கப்பட்டு வழங்கப்பட்டாள். பெண் தெய்வங்களை வழிபடும் நிலை 'தாய்த்தெய்வ வழிபாடு' என அழைக்கப்பட்டது. உயிர்படைக்கும் சக்தி பெண்களுக்குண்டு என்ற நிலையில் பெண் தெய்வமாக நிலைநிறுத்தப்பட்டாள். பழந்தமிழர் வழிபாட்டில் இன்றியமையாத இடம் தாய்த்தெய்வ வழிப்பாட்டிற்கு உண்டு என்பதை இக்கட்டுரை நிறுவுகின்றது.

## தாய் தெய்வ வழிபாடு

'அம்மன்' என்ற பொதுப் பெயரால் அழைக்கப்படும் பெண் தெய்வங்கள் பெண்மை மற்றும் தாய்மைக் குணங்களை ஒருசேரப் பெற்றவையாக விளங்குகின்றன. தொடக்கக் காலத்தில் வளமை தொடர்பான சடங்குகள் பெண்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதால் பின்னாளில் பெண்களே வளமையின் குறியீடாகக் கருதி வழிபடப்பட்டனர். இதுவே, தாய்த் தெய்வ வழிபாடு தோன்றி வளர்வதற்குக் காரணமாய் அமைந்தது.

மழையாகப் பொழிந்து மண்ணுயிர்களைக் காப்பவள் மாரியம்மாள், நதியாக ஓடி நஞ்சை புஞ்சைகளை காப்பவள் கங்கையம்மாள், தீமைகள் அண்டாதவாறு காப்பவள் எல்லையம்மாள் என்ற பெண் தெய்வங்கள் வளமையை மையமிட்டே வணங்கப்பட்டன. காவிரி ,கங்கை, யமுனை, சரஸ்வதி போன்ற பெரு நதிகளைப் பெண் தெய்வங்களாகவும் தாய்த் தெய்வங்களாகவும் வழிபட்டு வருகின்றனர்.

## ஆதி மனிதனும் பெண் போற்றுதலும்

வேட்டையாடித் திரிந்த நாகரிகத்திற்கு முந்திய காலத்திலேயே முதன் முதலாகப் பெண்ணை மனிதன் போற்ற ஆரம்பித்தான். பஞ்சபூதங்கள் என்று சொல்லக்கூடிய இயற்கையையே முதலில் வணங்கினார்கள். வேட்டையாடச் செல்லும் போது ஏற்படும் அச்சம், தாக்கம் ஆகியவற்றைத் தவிர்ப்பதற்கு அந்த இயற்கை யிடமே வேண்ட ஆரம்பித்து, வணங்கிக் கொண்டாடி மகிழ்ந்தான் மனிதன்.

*பெண்கள் ஓர் உயிரைப் பெற்றெடுக்கும் அதிசயமான நிகழ்வைக் கண்ட பழைய கற்கால மக்கள் , உயிரைப் படைக்கும் சக்தி பெண்களுக்கு உண்டு என்பதை அறிந்தான். தங்கள் இனத்தை விருத்தி செய்பவளமாகிய பெண்கள் வணக்கத்திற்கு உரியவர்கள் என்ற கருத்தை அனைவரும் கடைப்பிடித்தனர். அதன் பிறகு வந்ததே தாய்த் தெய்வ வழிப்பாடாகும்.*

**சமூக மரபுகள்**

*பழந்தமிழர் பல இனக்குழுவாக வாழ்ந்த காலகட்டத்தில் அவ்வினக் குழுவுக்குப் பெண்ணே தலைமை ஏற்றாள். அக்காலக் கட்டத்தில் இனக்குழுவினர் முதன் முதலாக வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டனர். தொழிலே பெண்களே முதன்மை பெற்று திகழ்ந்தனர். எனவே, அச்சமுதாயம் 'தாய்வழிச் சமுதாயம்' எனப்பட்டது. இதனை,*

"உழவுத் தொழிலின் தொடக்கத்தில் பெண்களே
முக்கியப் பங்கு எடுத்துள்ளனர்"

*என்பதை குறிப்பிடப்படுகிறது.*

*இன்று தந்தையானவர் குடும்பத்திற்குத் தலைவராயிருப்பது போல் தாய் தலைவியாக ஒரு காலத்தில் இருந்தாள். அக்காலத்தில் தந்தைக்கு முதன்மை நிலை இன்மையால் பிள்ளைகள் தாய் வழி அறியப்பட்டனர். தாயே எல்லா வல்லமையும் உடையவள் என நினைத்தமையால் அவர்கள் கடவுளை தாய் வடிவில் வழிபட்டார்கள் என்று ந.சி. கந்தையாபிள்ளை குறிப்பிட்டுள்ளார்.*

*இன்றைய நிலையில் தந்தைக்கு முதலிடம் கொடுக்கப்படுவதுபோல் பழகாலத்தில் தாய்க்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தார்கள்.*

*'பெண்' சமுதாயத்தில் முதன்மை பெற் று வழிபாட்டிலும் முதன்மை பெற்றிருக்கிறாள். மக்கள் பெண் தெய்வங்களைத் தங்கள் தாயாக நினைத்து வழிபட்டு வந்திருந்தனர். உயிர்களைப் பெருக்கும் ஆற்றல் பெண்களுக்குரிய பண்பாகும். நோய்க்காலத்தில் குழந்தையைத் தாய் அக்கறையுடன் பேணிக்காக்கிறாள். இந்த அடிப்படைப் பண்புகளை வைத்து மனித சமூகத்தில் மக்களினப்பெருக்கம், உணவு உற்பத்திப் பெருக்கம், கால்நடைப் பெருக்கம், மழை இவற்றிற்காகவும், நோய்களிலிருந்து மக்களைக் காக்கவும் தாய்த்தெய்வ வழிபாடு தோன்றியதாக தொ. பரமசிவன் கூறுகிறார்.*

**காட்டிலுரையும் தாய்த்தெய்வம்**

*சங்க இலக்கியங்களில் தாய்த்தெய்வமான காட்டில் உறைபவளாகக் கூறப்பட்டுள்ளது. மக்கள் காட்டிற்குச் சென்று வணங்கி இருக்கிறார்கள். இப்போது காடுகளில் சென்று வணங்குவது என்பது அரிதாகிவிட்டது.*

*'மாயோன் மேய காடுறை உலகம்' என்று தொல்காப்பியர் கூறினும் மாயோனுக்கு முன்னரே காடுறை கடவுளாக தாய்த்தெய்வமே இருந்திருக்கின்றாள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.*

"கானமர் செல்வி அருளலின் வெண்கற்
பல்படைப் புரவி எய்திய தொல்லிசை
நுணுங்குநுண் பனுவற் புலவன் பாடிய
கனமழை தவழும் ஏழிற் குன்றத்துக்
கருங்கால் வேங்கை செம்பூம்"

*என்னும் பாடல் வரியில் 'கானமர் செல்வி' என்ற தாய்த்தெய்வம் அருளியதால், வெண்கால்களையுடைய குதிரைகளை நன்னன் பரிசாகப் பெற்றான் என்று அகநானூறு கூறுகின்றது. தெய்வத்திடம் மனமுவந்து வணங்கினால் தங்களது கோரிக்கைகள் நிறை வேறும் என்ற நம்பிக்கை காலங்காலமாகத் தமிழரிடம் காணப்படுகின்றது.*

"வலை வலந்தன்ன மென்னிழன் மருங்கில்
காடுறை கடவுட் கடன் கழிப்பிய பின்ற"

*காட்டில் உள்ள தெய்வத்தைப் "பெருங் காட்டுகொற்றி" என்று கலித்தொகையும் கூறுவதால் இதனை அறியலாம்.*

**கொற்றவை வழிபாடு**

*சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ள சூர், அணங்கு முதலான இயற்கை இகந்த ஆற்றல்களிலி யிருந்தே பழந்தமிழ் மக்களின் தாய்த்தெய்வ வழிபாட்டின் தொடக்கத்தை பல்வகை நம்பிக்கைகள் மற்றும் வழிப்பாட்டுச் சடங்குகளாகப் பரிணாமம் பெற்றனர் சங்க காலத்தில் கொற்றவை மலை, காடு என்ற இருநிலத் தெய்வமாக கருதப்பட்டாள் என்பதை,*

"விடர் முகை இடுகத்து விறல்கெழு சூலி"**?**
"கடவுளின் நிலைஇ"
உருகெழு மரபின் அயிரை

காணமர் செல்வி
பெருங் காட்டு கொற்றி

*சங்க இலக்கியப் பாடல்கள் காட்டுகின்றன.*

“நிறம்படு குருதி புறம்படின் அல்லது
மடைஎதிர் கொள்ளா அஞ்சுவரு மரபின்
கடவுள் அயிரையின் நிலைஇஇ
கேடு இலவாகி பெரும! நின் புகழே!”

*இப்பதிற்றுப்பத்தின் பாடல்களில் இடம்பெறும் அயிரை வழிப்பாட்டை கொற்றவை வழிபாடு என்றே தாய் வழிச் சமூகத்தின் வழிபடு தெய்வமான ‘கொற்றவை’ வழிபட்டனர் என்று குறிப்பிடப்படுகிறது.*

“மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே!
வெற்றி , வெல்போர் கொற்றவை சிறுவ!
இழையணி சிறப்பின் பழையோள் குழவி!”

*திருமுருகாற்றுப்படையில் முருகன் யாருடைய மகன் என்பதனை குறிப்பிடும்போது நக்கீரர், பழையோள் பழந்தமிழர்த் தொல்குடிச் சமூகத் தாய்த்தெய்வமாகும். கொற்றவை என்பவள் வேட்டை மற்றும் மேய்ச்சல் சமூகத் தாய்த்தெய்வமாகும்.*

*சிவனோடு கொற்றவையைத் தொடர்புப்படுத்தும் அடையாளங்களும் இடம்பெற்றுள்ளன. பரிபாடலில் இடம்பெறும் அப்பகுதி பின்வருமாறு,*

“நெற்றி விழியா நிறைத்திலக மிட்டாள்
கொற்றவைக் கோலங் கொண்டோர்”

*இப்பாடலடிகளில் கொற்றவை கோலம் கொண்ட பெண் ஒருத்தி நெற்றிக்கண்ணாகத் திலகம் இட்டுக்கொண்ட குறிப்பு இடம்பெற்றுள்ளது. சிவனின் நெற்றிக்கண் இங்கு கொற்றவைக்கு உரியதாய் காட்டப்பட்டுள்ளது.*

“திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்
தொருபாட்குக் காடுகாட்கு ஒன்று மருவினிய
வையைஇரு பத்தாறு மாமதுரை நான்கென்ப
செய்ய பரிபாடல் திறம்”

*பரிபாடல் இடம்பெறும் காடுகாட்கு என்ற செய்தி ‘காடுகாள்’, ‘காடுகிழாள்’ ஆகிய கொற்றவைக் குறித்த பரிபாடல் பதிவுக்கு தக்கச்சான்றாகும். திருமால், முருகன் குறித்த பாடல்களைக் கொண்ட பரிபாடலில் ‘காடுகிழாள்’ ஆகிய கொற்றவைக்கும் ஒரு பாடல் இருந்ததாக குறிப்பிடப்படுகிறது.*

**முடிவுரை**

*மனித சமூகத்தில் மக்களின பெருக்கம், உணவு உற்பத்திப் பெருக்கம், கால்நடைப் பெருக்கம், மழை இவற்றிற்காகவும் மக்களைக் நோய்களிலிருந்து காக்கவும் தாய்த்தெய்வ வழிபாடு தோன்றிருக்கலாம் என்பதற்கு இலக்கியச் சான்றுகள் மிகுதியாக உள்ளன. தமிழர் பண்பாட்டில் பெண்மையைப் போற்றும் வகையில் வழிபாடு இருந்து வருகிறது தாய்வழிச் சமூகத்தில் ஆரம்பித்த வழிபாடு பல்வேறு சமூக மாற்றங்களையும் கடந்து இன்றுவரை பல்வேறு வடிவங்களில் நிலைத்து நிற்பதையே இவ்வழிபாட்டின் தொடர்ச்சி என எடுத்துக்காட்டுகின்றது.*

**அடிக்குறிப்புகள்**

1. சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப – 225
2. முனைவர் செ. இராஜேஸ்வரி, பெண் தெய்வ வழிபாடு, ப – 158
3. பி. எல். சாமி, தமிழ் இலக்கியத்தில் தாய் தெய்வ வழிபாடு, ப – (1– 47)
4. பதிற்றுப்பத்து.பா– 88
5. பரிபாடல். பா– 25
6. அகநானூறு. பா– 56
7. கலித். பா– 86
8. திரு.முரு. பா– 45

**துணைநூற் பட்டியல்**


1. சக்திவேல். சு. நாட்டுப்புற இயல் ஆய்வு, மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை–600108, முதற்பதிப்பு–ஜூன்.1983.
2. முனைவர் இராஜேஸ்வரி. செ. பெண் தெய்வ வழிபாடு, சந்திரோதயம் பதிப்பகம், மதுரை–625 018, பதிப்பு–2020.
3. சாமி. பி. எல். தமிழ் இலக்கியத்தில் தாய் தெய்வ வழிபாடு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பதிப்பு – 2011.